திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஸ்ரீரங்கத்தில் மகளிர் தோட்டக் கலை கல்லூரி: முதல்வர் தொடங்கி வைத்தார்**

First Published : 26 Jul 2011 12:42:45 AM IST



சென்னை, ஜூலை 25: திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் மகளிர் தோட்டக் கலை கல்லூரியை முதல்வர் ஜெயலலிதா திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். விடியோ கான்பரன்சிங் முறை மூலம் அவர் கல்லூரியை துவக்கினார்.

ஸ்ரீரங்கம் தொகுதியில் கடந்த மாதம் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றிய முதல்வர் ஜெயலலிதா, தோட்டக் கலை வல்லுநர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஸ்ரீரங்கம் தொகுதியில் அமைக்கப்படும் என அறிவித்தார். சட்டப் பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட மணிகண்டம் ஒன்றியம், நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் வேளாண்மைக் கல்லூரிக்கு அருகில் தோட்டக்கலைக் கல்லூரி உருவாக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

இந்தக் கல்லூரியில் 40 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனவும், முதலாம் ஆண்டில் ரூ.10 கோடி ஒதுக்கப்படும் எனவும் அறிவித்திருந்தார். கல்லூரிக்கான நிர்வாகக் கட்டடம், அலுவலகம், ஆய்வுக் கூடங்கள், விரிவாக்க அரங்கம் உள்ளிட்டவற்றுக்கான அடிக்கல்லை அந்த விழாவிலேயே நாட்டினார்.

தொடக்கம்: இதன் தொடர்ச்சியாக புதிய மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை முதல்வர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தில் இருந்தபடியே விடியோ கான்பரன்சிங் முறை மூலம் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். இந்த விழாவில் முதல்வர் ஜெயலலிதா பேசியது:

ஸ்ரீரங்கம் தொகுதியில் பெண்களுக்கென்றே தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க கடந்த மாதம் 19-ம் தேதி அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று பெண்களுக்கான தோட்டக்கலை கல்லூரியையும், நிலையத்தையும் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து, அருப்புக்கோட்டையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள விவசாயிகள் பயிற்சி மையத்துக்கான நிர்வாக கட்டடம், விவசாயிகள் விடுதி, கோழி, ஆடு வளர்ப்பு பற்றிய விளக்கக் கூடம், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திடக்கழிவுகள் வேளாண்மை மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு தொழில்நுட்ப விளக்கக் கூடம், விதை ஆய்வுக்கூடத்துக்கு முதல்

தளம், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்துக்கு மகளிர் விடுதி ஆகிய கட்டடங்களை விடியோ கான்பரன்சிங் மூலம் திறந்து வைத்தார்.

வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள், அங்குள்ள தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய காய்கறி பயிர்கள் துறைக்கு அலுவலக கட்டடம், ஆய்வுக் கூடங்கள், எரிசக்தி பயிற்சிக் கூடம், அச்சுக்கூடம் விரிவாக்கம், ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி மையத்தில் விதை சேமிப்பு கிடங்கு, ஏத்தாபூர் மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்துக்கு பணியாளர் குடியிருப்பு உள்பட புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி உள்பட பலர் பங்கேற்றனர்.

**சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் ஏமாற்றம்**

First Published : 25 Jul 2011 12:30:53 PM IST

பல்லடம், ஜூலை 24:பல்லடம் பகுதியில் சின்ன வெங்காயத்தின் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர் பகுதியில் 9 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் பெருமளவு விவசாயிகள் விதை ஊன்றி 75 நாட்களில் அறுவடைக்கு வரும் சின்ன வெங்காய சாகுபடியை வைகாசி பட்டத்தில் செய்துள்ளனர்.

நடவு செய்த சின்ன வெங்காயம் தற்போது அறுவடை துவங்கியுள்ளது. துவக்கத்தில் கிலோ ரூ.30க்கு விற்றது. பின்னர் அறுவடை வெங்காயம் வரத்து அதிகரிப்பால் படிப்படியாக விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

தற்போது கிலோ ரூ.15க்கு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

வெங்காயத்தின் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் இன்னும் விலை சரிய வாய்ப்புள்ளதையடுத்து விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**தேனி வளர்க்கப் பயிற்சி**

First Published : 25 Jul 2011 01:22:49 PM IST

விருதுநகர், ஜூலை 24: விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் கல்லூரி சார்பில், சமுதாய முன்னேற்றத் திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு தேனி வளர்க்க இலவச பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் வேளாண் பண்ணையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பை செயலாளர் சண்முகமூர்த்தி தொடங்கி வைத்தார். இதில் மணியம்பட்டி, ஓ.கோவில்பட்டி ஆகிய கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு கோவிலாங்குளம் கேவிகே நிறுவனம் மற்றும் திருச்சியை சேர்ந்த பாலமுருகன் பயிற்சி அளித்தனர்.

இதில் தேனீப்பெட்டி வைப்பது, தேனீக்கள் தேன் எடுக்கும் கருவி, வளர்ப்பு ஆகியவை குறித்து விளக்கப்பட்டன. அதோடு நேரிடை செயல்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை சமுதாய முன்னேற்றத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.ஆனந்தன், பாலிடெக்னிக் கல்லூரியின் மக்கள் தொடர்பு அலுவலர் கே.குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

**எலுமிச்சை விளைச்சல் அதிகரிப்பு**

First Published : 25 Jul 2011 01:22:20 PM IST

ராஜபாளையம், ஜூலை 24: ராஜபாளையம் பகுதியில், நாட்டு எலுமிச்சம்பழம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் விலை சரிவடைந்துள்ளது.

எலுமிச்சம்பழம், கடந்த மாதம் கிலோ ரூ. 60 வரை விலை நிலவியது. ஆந்திர பகுதியில் இருந்து, அதிகளவில் எலுமிச்சை வந்ததால் விலை அதிகரித்திருந்தது. தற்போது ராஜபாளையம், சிவகிரி, வாசுதேவநல்லூர் பகுதியில் நாட்டு எலுமிச்சை விளைச்சல் அதிகரித்து, சந்தைக்கு அதிகளவில் பழங்கள் விற்பனைக்கு வருகின்றன.

ராஜபாளையம் உழவர்சந்தை, தினசரி காய்கறி மார்க்கெட்டில் ஒரு கிலோ பழம் ரூ. 20 ஆக சரிவடைந்திருந்தது. ஆனால், நாட்டுத் தக்காளி விளைச்சல் குறைவால், கிலோ ரூ. 20ஆக உயர்ந்துள்ளது. ஒட்டுத் தக்காளி வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ. 10 ஆக இருந்தது.

---

தினமலர்

**திருச்சியில் முதல் மகளிர் தோட்டகலைக்கல்லூரி : "வீடியோ கான்ஃபிரன்ஸ்' மூலம் இன்று ஜெ., திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,01:55 IST

திருச்சி: தமிழகத்தில் முதல் முறையாக மகளிருக்கென உருவாக்கப்பட்டுள்ள மகளிர் தோட்டகலைக் கல்லூரியை, முதல்வர் ஜெயலலிதா, "வீடியோ கான்ஃபிரன்ஸ்' மூலம் இன்று திறந்து வைக்கிறார்.

தமிழக வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 10 வேளாண் கல்லூரிகள் உள்ளன. இதில், கோவை, தேனி மாவட்டம் பெரியகுளம் ஆகிய ஆகிய இரண்டு வேளாண் கல்லூரிகளில் மட்டும் தோட்டக்கலைக் கல்லூரிகள் (இருபாலர்) செயல்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில் தோட்டக்கலை தொடர்பான வாழை, வெற்றிலை, மலர்கள் போன்ற பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, திருச்சியில் தோட்டக்கலைக்கல்லூரி தனியாக துவங்கப்பட வேண்டும் என கோரிக்கை எழுந்தது. குறிப்பாக, மகளிருக்கென தனி கல்லூரி உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது.

"திருச்சியில் மகளிருக்கென தோட்டக்கலைக் கல்லூரி துவங்கப்படும்' என தேர்தல் வாக்குறுதியில் ஜெயலலிதா கூறியிருந்தார். ஸ்ரீரங்கம் தொகுதியில் வெற்றி பெற்ற ஜெயலலிதா, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக தேர்வு செய்யப்பட்டார். சில நாட்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் நடந்த அரசு விழாவில் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டங்களை துவங்கி வைத்து, அடிக்கல் நாட்டினார். அப்போது 45 ஏக்கர் பரப்பளவில் திருச்சி மகளிர் தோட்டகலைக் கல்லூரி கட்டவும் அடிக்கல் நாட்டினார். 40 கோடி ரூபாயில் அமையவுள்ள இக்கல்லூரிக்கு, நடப்பாண்டு முதல் கட்டமாக 10 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்பின் அடுத்த மூன்றாண்டுக்கு தலா 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

அதன்படி, திருச்சி, முத்துக்குளத்தில் உள்ள தமிழக அரசின் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் 45 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி கட்டும் பணி துவங்கப்பட உள்ளது. நடப்பு கல்வியாண்டில் ஒதுக்கப்பட்ட 40 இடங்களில் 39 மாணவியர் சேர்ந்துள்ளனர். கல்லூரிக்கான புதிய கட்டிடம் கட்டும் பணி நடைபெறுவதால், வேளாண் கல்லூரியில் மகளிர் கல்லூரி செயல்படும். இந்த கல்லூரி திறப்புவிழா இன்று பகல் 12.30 மணிக்கு நடக்கிறது. சென்னையிலிருந்தபடி தமிழக முதல்வர் ஜெயலலிதா, வீடியோ கான்ஃபிரன்ஸிங் மூலம் திருச்சி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரியை திறந்து வைக்கிறார்.

எளிமையாக நடைபெறும் நிகழ்ச்சியில், திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன், வேளாண் கல்லூரி "டீன்' ஜெயலபால், ஆர்.டி.ஓ., சங்கீதா மற்றும் அரசு அதிகாரிகள், எம்.பி., எம்.எல்.ஏ.,க்கள் பங்கேற்கின்றனர்.

**பருத்தி நிலவரம் அறிய தகவல் மையம் : கலெக்டர் பாலாஜி நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,22:19 IST

விருதுநகர் : பருத்தி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவும், தேசிய மார்கெட் விலை நிலவரத்தை அறிய தகவல் மையம் அமைக்க கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். பருத்திக்கு உரிய விலை கிடைக்காமல் நஷ்டத்தில் தவிப்பதாக குறை தீர் கூட்டத்தில் விவசாயிகள் சங்கத்தினர் புகார் தெரிவித்தனர். அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் அப்பையநாயக்கன்பட்டி பகுதியில் கலெக்டர் பாலாஜி ஆய்வு செய்தார். விவசாயிகளிடம் பிரச்னைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், ""உற்பத்தி செலவு, விற்பனை விலையை கணக்கிட்டு அறிக்கை தயாரிக்க விவசாய இணை இயக்குனருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தி காய் பிடுங்குவதற்கு தொழிலாளர்கள் இல்லை என்பதால் இயந்திர மயாக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். பருத்தியின் தேசிய மார்க்கெட் நிலவரத்தை விவசாயிகள் அறிந்து கொள்ள தகவல் மையம் அமைக்கப்பட உள்ளது. கூட்டுறவு பருத்தி அரவை இயந்திரங்களை பழுது நீக்கம் செய்து இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு விற்பனை சங்க கட்டடத்தில் பஞ்சுகளை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,"என்றார்.மேலும், ""விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும் வகையில், தனியார் மில் அதிபர்களுடன் ஒருங்கிணைந்து ,விவசாய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள," உத்தரவிட்டார். விவசாய இணை இயக்குனர் முருகதாஸ், நேர் முக உதவியாளர் ஜெயபாண்டியன், மார்க்கெட்டிங் துணை இயக்குனர் கணேசன், இந்திய பருத்தி கழக அலுவலர் சக்திவேல் உட்பட சென்றனர்.

**நெல்லி சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மான்யம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,22:25 IST

தேனி : நெல்லி சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது என தோட்டக்கலை அலுவலர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை: நெல்லி எல்லா வகை மண்ணிலும் வறட்சியை தாங்கி வளரும். பெரு நெல்லி பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கவும், சோப்பு, பவுடர், அழகு சாதன பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. நெல்லியில் இருந்து 120 வகையான மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. நெல்லி உடலில் உள்ள திசுக்களை புதுப்பிக்க வல்லது. ஜூன் முதல் நவம்பர் வரை நெல்லி சாகுபடிக்கு ஏற்ற தருணம். நடும்போது

ஒட்டுக்கட்டிய அல்லது மொட்டுக்கட்டிய பாகம் நிலத்தின் மேல் இருக்குமாறு வைத்து நடவு செய்ய வேண்டும். நட்ட உடன் இருபுறமும் மூங்கில் தப்பைகள் ஊன்றி செடியுடன் சேர்த்து கட்ட வேண்டும். பவானிசாகர், கயா, காஞ்சன், கிருஷ்ணா, என்.ஏ.7 போன்ற ரகங்கள் வணிக ரீதியாக சாகுபடி செய்ய ஏற்றது. தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் நெல்லி சாகுபடி செய்ய எக்டேருக்கு 10 ஆயிரத்து 504 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது என் றார்.

**வேளாண் பல்கலை விஞ்ஞானிக்கு தேசிய விருது**

பதிவு செய்த நாள் : ஜூலை 26,2011,02:26 IST

கோவை : டில்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்தின் 2010ம் ஆண்டுக்கான "சுவாமி சகஜானந்த சரஸ்வதி விரிவாக்க விஞ்ஞானி விருது' கோவை வேளாண்மை பல்கலை பூச்சியியல் துறை விஞ்ஞானி மோகனுக்கு வழங்கப்பட்டது. டில்லியில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்தின் நிறுவன நாளில் விருது அளிக்கப்பட்டது. மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் சரத்பவார் முன்னிலையில் விருது வழங்கப்பட்டது. விதை மற்றும் தானிய சேமிப்புக்கு எதிரான பூச்சிகளை கண்டறிந்து நீக்க உதவும் குழாய் வடிவப்பொறி, தானிய சேமிப்பு பூச்சிகளை பராமரிக்க உதவும் உபகரணப்பெட்டி ஆகிய இரு கருவிகளின் கண்டுபிடிப்பை அங்கீகரிக்கும் வகையில், இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**தக்காளி விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,21:45 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதிகளில் தக்காளி நடவு செய்து வரும் விவசாயிகள் அசோஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிரியை தெளிக்க வேண்டும் என வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள செட்டியக்காபாளையம், நல்லட்டிபாளையம், கோவிந்தாபுரம், வடபுதூர், முத்துக்கவுண்டனூர், வீரப்பகவுண்டனூர் உட்பட 72 கிராமங்களில் உள்ள 50 எக்டர் பரப்பில் தக்காளி நாற்று நடவு செய்வதற்கு விவசாயிகள் தயாராகியுள்ளனர். தக்காளி நாற்று நடவு செய்வதற்கு முன்பு, பாத்திகளில் உள்ள தக்காளி நாற்றுகளை எடுத்து, ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ அசோஸ்பைரில்லம், ஒரு கிலோ பாஸ்போ பேக்டீரியாவை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்த கரைசலில், வேர்பகுதியை நனைத்து, பின்பு நடவு செய்யவேண்டும். அப்போது தக்காளிச்செடிக்கு தேவையான தளைச்சத்து மற்றும்

மணிச்சத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் தக்காளிச் செடிக்கு அடிக்க வேண்டிய உரங்களில் இருந்து 20 சதவீதம் உரச் செலவுகளை குறைக்கலாம். இவ்வாறு செய்யம்போது, தக்காளிச் செடியின் காய்ப்புத்திறன் அதிகரிக்கிறது.இந்த நுண்ணுயிரிகள் கிணத்துக்கடவு வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கிறது என வேளாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**குறுகிய இழை பருத்திக்கு விலை இல்லை:செடிகள் மாடுகளுக்கு உணவாகும் அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,21:15 IST

உடுமலை : குறுகிய இழை பருத்திக்கு விலை இல்லாததால், பறிக்கும் கூலிக்கு கூட கட்டுப்படியாகாமல், மானவாரியாக பருத்தி பயிரிட்ட விவசாயிகள் விளைநிலங்களில் மாடுகளுக்கு பருத்தி செடிகளை உணவாக்கும் அவல நிலை உள்ளது.
உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., மண்டல பாசனம் மற்றும் மானாவாரியாக பருத்தி பயிரிடப்படுகிறது. தேவனூர்புதூர், ஆண்டியூர், கொடிங்கியம், ராவணாபுரம், கரட்டுமடம் உட்பட கிராமங்களில் மானாவாரியாக குறுகிய இழை பருத்தி ரகங்கள் பயிரிடப்படுகிறது. வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழையை அடிப்படையாக கொண்டு மானாவாரி பருத்தி பயிரிடப்படுகிறது. இந்த சாகுபடியில் ஏக்கருக்கு அதிகபட்சமாக 5 குவிண்டால் பருத்தி விளைச்சல் இருக்கும். குறுகிய இழை பருத்தி ரகத்திற்கு கடந்தாண்டு நல்ல விலை கிடைத்து வந்தது. இந்நிலையில், நூல் ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்ததால் மில் நிர்வாகத்தினர் பருத்தி கொள்முதலை வெகுவாக குறைத்தனர். இதனால், பருத்தியின் விலை கடந்த இரண்டு மாதங்களாக வீழ்ச்சியில் உள்ளது. தற்போது குறுகிய இழை பருத்தி ரகத்திற்கு சராசரியாக கிலோவுக்கு 35 ரூபாய் வரை கிடைக்கிறது. பறிக்கும் கூலிக்கு கூட கட்டுப்படியாகாத விலை மற்றும் விளைச்சல் குறைவு போன்ற காரணங்களால் மானாவாரியாக பருத்தி பயிரிட்ட விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் செடிகளில் மாடுகளை மேயவிட்டுள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "போதிய அளவு பருவமழை பெய்யாததால் மானாவாரியாக பயிரிடப்பட்ட பருத்தி செடிகளில் விளைச்சல் குறைவாக உள்ளது. மேலும், விலை பல மடங்கு சரிந்துள்ளதால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தொழிலாளர் தட்டுப்பாடு காரணமாக பருத்தி எடுக்கும் பணிகளுக்கு யாரும் வருவதில்லை. அதிக கூலி கொடுத்து பருத்தி பறித்தாலும் விலை இல்லாததால் நஷ்டமே ஏற்படுகிறது. எனவே பருத்தி பயிரிட்டுள்ள விளைநிலங்களில் மாடுகளை மேய்த்து வருகிறோம்', என்றனர். மானாவாரி பருத்தி சாகுபடியில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் நஷ்டத்தால் விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறி வருகின்றனர். இதனால், உடுமலை பகுதியில் பருத்தி சாகுபடி பரப்பு இந்தாண்டு குறையும் வாய்ப்புள்ளது.

**ட்டன்சத்திரம் விவசாயிகள் ஏக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,22:47 IST

ஒட்டன்சத்திரம் : மானாவாரி நிலங்களில் ஆடிப்பட்ட உழவுக்காக, மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஒட்டன்சத்திரம், சுற்று கிராமப்பகுதிகளில் அதிகளவில் மானாவாரி நிலங்கள் உள்ளன. மழை பெய்தால் தான் விவசாயம் களை கட்டும். ஆடி மாத மழையை நம்பி மானாவாரி நிலங்களில், உழவு செய்து விதைப்பதற்கான பணிகளை தொடங்குவர். ஆடி மாதம் தொடங்கி ஒரு வாரம் ஆகியுள்ள நிலையில், இப்பகுதியில் மழை பெய்யவில்லை. மழை நன்றாக பெய்தால் கடலை, மக்காச்சோளம் அதிகளவில் பயிர் செய்யப்படும். இதனால் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

**கரும்பு விவசாயிகள் சங்கக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,23:13 IST

சிறுபாக்கம் : தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க ஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் கூட்டம் சிறுபாக்கத்தில் நடந்தது.ஆலை மட்டத் தலைவர் சுப்ரமணியன் தலைமை தாங்கினார். மாநிலக் குழு உறுப்பினர் வக்கீல் ராஜா, செயலர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தனர். கவுரவத் தலைவர் கந்தசாமி, பொருளாளர் பொன்னுசாமி, நாராயணன், கோகுலகிருஷ்ணன், செல்வராசு, வேதமணி உட்பட பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில், கரும்பு பயிரினை ஒரு வருடத்தில் வெட்டுவதை உறுதி செய்ய வேண்டும். பதிவு செய்யப்படாமல் உள்ள கரும்புகளை முன்னுரிமை கொடுத்து கரும்பு வெட்டப்படுவதை கண்டிப்பது. கரும்பு வெட்டிய விவசாயிகளுக்கு 15 நாட்களுக்குள் பணம் வழங்க வேண்டும்.வெட்டுக் கூலி, வாகன வாடகை ஆகியவற்றை ஆலை நிர்வாகம் ஏற்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**எண்ணெய் பனை சாகுபடிக்கு எக்டருக்கு ரூ.16 ஆயிரம் மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,23:13 IST

திட்டக்குடி : எண்ணெய் பனை சாகுபடியை ஊக்குவிக்க, முதல் ஆண்டில் எக்டருக்கு 16 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு வழங்குகிறது. தொழுதூரில் நடந்த எண்ணெய் பனை அறுவடையை, கடலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் சந்திரமோகன் ஆய்வு செய்தார். ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராஜலட்சுமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் நாராயணசாமி, பிரகாஷ், தேவராஜ், காவேரி, பாமாயில் நிறுவன கள அலுவலர் சுந்தரபாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.எண்ணெய் பனை குலைகளை நன்கு முதிர்ச்சி

அடைந்த பின்னர் அறுவடை செய்து அன்றே எண்ணெய் பிழியும் ஆலைகளுக்கு அனுப்ப வேளாண் துணை இயக்குனர் தெரிவித்தார்.மேலும், எண்ணெய் பனை சாகுபடியை ஊக்குவிக்க அரசு மானியமாக முதலாம் ஆண்டு 16 ஆயிரம் ரூபாய், இரண்டாம் ஆண்டு (இடுபொருள்) 2,450 ரூபாய், மூன்றாம் ஆண்டு (இடுபொருள்) 2,800 ரூபாய், நான்காம் ஆண்டு (இடுபொருள்) 3,250 ரூபாய் ஒரு எக்டருக்கு வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

**மண்வள பாதுகாப்பு கருத்தரங்க நிகழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,23:34 IST

திண்டிவனம் : ஒலக்கூர் கிராம சமுதாயக் கூடத்தில் மண் வள பாதுகாப்பு கருத்தரங்கம் நடந்தது.திருச்சி கொரமண்டல் இண்டர் நேஷனல் நிறுவன மண்டல மேலாளர் செல்வகுமார் தலைமை தாங்கினார். ஒலக்கூர் உதவி வேளாண்மை இயக்குனர் ராஜசேகர் முன்னிலை வகித்தார். விற்பனை அகிகாரி லட்சுமணன் வரவேற்றார். நிறுவன உதவி மேலாளர் சீனுவாசன், விழுப்புரம் மண் ஆய்வுகூட வேளாண் அதிகாரி கங்காகவுரி, விவசாயி சென்னை மதன்நாயுடு, உர டிப்போ உரிமையாளர் பாண்டியன், நிறுவன வரிவாக்க மேலாளர் செல்வகுமார் உட்பட பலர் பேசினர்.உர விற்பனையாளர்கள் வெங்கடேசன், ரவி, ராமதாஸ், ஆனந்த், புரு÷ஷாத்தமன், ராமதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். களப்பணியாளர் பாலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

---

தினத் தந்தி

**கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ரூ.6½ கோடி செலவில் புதிய கட்டிடங்கள் வீடியோ கான்பரன்சிங் முறையில் ஜெயலலிதா திறந்து வைத்தார்**

*கோவை,ஜூலை.26–*

*கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்குட்பட்ட புதிய கட்டிடங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வீடியோ கான்பரன்சிங் மூலம் அடிக்கல் நாட்டியும், திறந்தும் வைத்தார்.*




சென்னையில் இருந்து வீடியோகான்பரன்சிங் மூலம், முதல்–அமைச்சர் ஜெயலலிதா கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்துக்காக கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை திறந்து வைத்து, அடிக்கல் நாட்டிய போது எடுத்தபடம். கலெக்டர் கருணாகரன், கோவை மாவட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், மற்றும் எம்.பி. ஆகியோர் அருகில் உள்ளனர்.

அடிக்கல் நாட்டுவிழா–திறப்பு விழா

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக புதிய கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா, மற்றும் திறப்பு விழா கோவை வேளாண்மை பல்கலைக்கழக அரங்கில் நேற்று நடந்தது. அவற்றை சென்னை தலைமைச்செயலகத்தில் இருந்தவாறு, முதல்–அமைச்சர் ஜெயலலிதா வீடியோகான்பரன்சிங் முறையில் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் செங்கோட்டையன், எஸ்.பி.வேலுமணி, என்.ஆர்.சிவபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவையில் நடந்த நிகழ்ச்சிக்கு கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேச பூபதி முன்னிலை வகித்தார்.

திறந்து வைக்கப்பட்ட கட்டிடங்கள்

வீடியோ கான்பரன்சிங் முறையில் முதல்–அமைச்சரால் திறந்துவைக்கப்பட்ட கட்டிடங்களின் விவரம் வருமாறு:–

கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்துக்குட்பட்ட அருப்புகோட்டை வேளாண் அறிவியல் நிலையத்தில் ரூ.55 லட்சம் செலவில் நிர்வாக அலுவலக கட்டிடம், ரூ.30 லட்சம் செலவில் உழவர்கள் விடுதி, ரூ.10 லட்சம் செலவில் ஆடு மற்றும் கோழிப்பண்ணை செயல் முறை விளக்க கூடம், புதுக்கோட்டை வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் ரூ.55 லட்சம் செலவில் நிர்வாக அலுவலக கட்டிடம், தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.40 லட்சம் செலவில் அலுவலர் குடியிருப்புகள், தஞ்சாவூர் மண் மற்றும் நீர் மேலாண்மை

ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.35 லட்சம் செலவில் அலுவலக கட்டிடம், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ரூ.53 லட்சம் செலவில் திடக் கழிவு மேலாண்மை மற்றும் மண் புழு உர தொழில்நுட்ப அறிவுமையம், ரூ.25 லட்சம் செலவில் விதை மையத்தின் முதல் மாடியில் புதிய ஆய்வக கூடங்கள், ரூ.12 லட்சம் செலவில், சிறுதானிய இனப்பெருக்க நிலையத்தின் பண்ணை அலுவலகம், மற்றும் கிடங்கு, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.25 லட்சம் செலவில் கிடங்கு மற்றும் வாகனம் நிறுத்தும் இடம், கோவில் பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.15 லட்சம் செலவில் மாணவியர் விடுதிகள் கட்டடப்பட்டுள்ளன. இவற்றி மதிப்பு ரூ.3 கோடியே 48 லட்சம் ஆகும்.

புதிய கட்டிடங்கள்

மேலும் அடிக்கல் நாட்டடப்பட்ட புதிய கட்டிடங்களின் விவரம் வருமாறு:–

ரூ.62 லட்சம் செலவில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பழப்பண்ணையில் காய்கறி பயிர்துறைக்கான அலுவலகம், மற்றும் ஆய்வக வளாக கட்டிடம், ரூ.45 லட்சம் செலவில் இயற்கை ஆதார மேலாண்மைத்துறைக்கான அலுவலகம், ரூ.1 கோடியே 25 லட்சம் செலவில் வேளாண்மை பல்கலைக்ழக ஆசிரியர் அல்லாதோர் குடியிருப்புகள், ரூ.10 லட்சம் செலவில் ஏத்தாப்பூர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மைய அலுவலர் குடியிருப்புகள், ரூ.12 லட்சம் செலவில் வேளாண்மை பல்கலைக் கழக அச்சுத்துறை விரிவாக்க கட்டிடம், ரூ.10 லட்சம் செலவில் ஆழியார்நகர், தென்னை ஆராய்ச்சி நிலைய விதைசேமிப்பு கிடங்கு ஆகியவை ஆகும். இதன் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 89 லட்சம் ஆகும்.

எம்.பி–எம்.எல்.ஏ.க்கள்

நிகழ்ச்சியில், சுகுமார் எம்.பி, மற்றும் எம்.எல்.ஏக்கள் தா.மலரவன், பொள்ளாச்சி ஜெயராமன், சின்னச்சாமி, சேலஞ்சர் துரை, ஓ.கே.சின்னராஜ், தாமோதரன், வி.சி.ஆறுக்குட்டி, முத்துக்கருப்பண்ணசாமி, கருப்பசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக புதிய கட்டிடங்களை திறந்து வைத்த முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் புகழேந்தி, மாணவி ஹேமலதா ஆகியோர் நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர் தியோடர், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் தங்கராஜ், உதவி அலுவலர் பாரதி தாசன் உள்பட மாணவ–மாணவிகள், பேராசிரியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## தேனீக்களை வளர்ப்பது எப்படி? வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிற்சி

*கோவை, ஜூலை.26–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் தேனீக்களை வளர்ப்பது குறித்த ஒரு நாள் பயிற்சி வருகிற 8–ந் தேதி நடக்கிறது. இதில் தேனீ கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை, சேர்த்து வளர்க்கும் முறை, ராணீத் தேனி உற்பத்தி முறை, இயற்கை எதிரிகள் நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. இதில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வேளாண் பூச்சியியல் துறைக்கு தங்கள் சொந்த செலவில் வரவேண்டும். இதில் கலந்து கொள்ள கட்டணமாக ரூ.150–ஐ பயிற்சி நாளன்று செலுத்த வேண்டும். பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்பூச்சியில் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது 0422– 6611214 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி ரவிகுமார் தியோடர் தெரிவித்தார்.*

## உற்பத்தி அதிகரிப்பு காரணமாக தேயிலை தூள் விலை வீழ்ச்சி பச்சை தேயிலை விலையும் குறைந்தது

*குன்னூர், ஜூலை.26–*

*உற்பத்தி அதிகரிப்பு காரணமாக தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்தது. மேலும் பச்சை தேயிலை விலை யும் குறைந்தது.*

*தேயிலை சாகுபடி*

*நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் தேயிலை சாகு படியில் ஈடுபட்டு வருகின்ற னர். சிறு தேயிலை விவசாயி களின் தோட்டங்களில் அறு வடை செய்யப்படும் பச்சை தேயிலை சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங் கப்பட்டு வருகின்றன. மாவட் டத்தில் உள்ள 14 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தங்களிடம் உறுப்பினர்களாக உள்ள சிறு விவசாயிகளிடம் இருந்து பச்சை தேயிலையை பெற்று வருகின்றன.*
*தேயிலை தூள் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொரு ளான பச்சை தேயிலைக்கு வார விலை மாத விலை என்று இரு விலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பச்சை தேயி லைக்கு வழங்கப்படும் விலை தேயிலை ஏல மையத்தில் விற்பனையாகும் தேயிலை தூளின் விலையை பொறுத்தே வழங்கப்பட்டு வருகிறது.*

உற்பத்தி அதிகரிப்பு

கடந்த 2 மாத காலமாக குன்னூர் தேயிலை ஏல மையத் திலும், கூட்டுறவு தேயிலை ஏல மையமான டீசர்வ் ஏல மையத் திலும் தேயிலை தேயிலை தூளுக்கு கிராக்கி இருந்து வந்தது. உற்பத்தி அதிகரித்து இருந்தாலும் ஏற்றுமதி வர்த் தகர்கள் அதிக ஆர்வமுடன் ஏலத்தில் பங்கு பெற்றதால் தேயிலை தூளுக்கு விலை உயர்வு இருந்து வந்தது.

கடந்த மாதங்களில் விலை உயர்வு கண்ட தேயிலை தூள் கடந்த 2 வாரங்களாக தேயிலை ஏல மையத்தில் விலை சரிவை சந்தித்து வருகின்றது. பச்சை தேயிலை மகசூல் அதிகரிப்பு காரணமாக தேயிலை தூள் உற்பத்தியும் அதிகரித்து உள்ளது. இது மட்டுமின்றி ஏற்றுமதி யாளர்கள் தங்களுக்கு தேவையான தேயிலை தூளை வாங்கி விட்டதாக ஏல மைய வட்டாரத்தில் கூறப்படுகிறது. இதனால் கடந்த 2 வாரங்களாக தேயிலை தூளுக்கு இரு ஏல மையங்களிலும் விலை குறைவு ஏற்பட்டு வருகிறது.

தேக்கம்

விற்பனை எண் 28–க்கான ஏலத்தில் 17 லட்சத்து 17 ஆயிரம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. விற் பனை எண் 29–க்கான ஏலத் தில் 16 லட்சத்து 71 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இரு ஏலத்திலும் 28 சதவீத தேயிலை தூள் விற்பனை யாகாமல் தேக்கம் அடைந்தது. இரு ஏலங்களிலும் 3 ரூபாய் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதன் எதிரொலி யாக சாதாரணமாக பச்சை தேயிலைக்கு 6.50 ரூபாய் என்றும் 7 ரூபாய் என்றும் விலை கொடுக்கப்பட்டது. ஆனால் கடந்த 23–ந் தேதி சனிக்கிழமை பச்சை தேயிலை யின் பிரிவுகளான ‘ஏ’ கிரேடு பச்சை தேயிலைக்கு ரூ.15 முதல் ரூ.17 வரையிலும், ‘பி’ பிளஸ் பச்சை தேயிலைக்கு 14 ரூபாயும் விலை வழங்கப்பட்டு உள்ளது. விவசாய சங்கங்களின் மூலம் பச்சை தேயிலை வழங்கிய விவசாயிகளுக்கு இந்த விலை வழங்கப்பட்டு உள்ளதாக விவசாய சங்க நிர்வாகிகள் கூறினர்.

பாதிப்பு

தரமான பச்சை தேயிலைக்கு விலை கிடைத்தாலும் சீதோஷ்ண நிலை மற்றும் பராமரிப்பு காரணமாக சாதாரண வகை பச்சை தேயிலை தான் பறிக்க முடிகிறது என்று பெரும் பாலான சிறு விவசாயிகள் கூறி வருகின்றனர்.

ஆட்கள் பற்றாக்குறை, பராமரிப்பு செலவு அதிகரிப்பு இவற்றால் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். எவ்வாறு இருப்பினும் மத்திய அரசு தேயிலை தூளை உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக விற்பனை செய்யும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று விவசாயி களின் கருத்தாக உள்ளது.

**அதிக விலை தரும் தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலையை வினியோகம் செய்யுங்கள் விவசாயிகளுக்கு தென்மண்டல செயல் இயக்குனர் வேண்டுகோள்**

*மஞ்சூர், ஜூலை.26–*

*அதிக விலை தரும் தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலையை வினியோகம் செய்யுங்கள் என்று தேயிலை வாரிய தென்மண்டல செயல் இயக்குனர் அம்பல வாணன் கூறினார்.*

*தர மேம்பாட்டு முகாம்*

*மஞ்சூரில் உள்ள ஹீரோ டைய்யா ஹாடஹெத்தை டிரஸ்ட் அரங்கில் நேற்று தேயிலை வாரியம் மற்றும் உபாசி வேளாண்மை அறிவி யல் மையம் சார்பில் தேயிலை தர மேம்பாட்டு முகாம் நடை பெற்றது. முகாமுக்கு இன்கோ சர்வ் முன்னாள் தலைவர் ரங்கைய்யா தலைமை தாங்கி னார். சாம்ராஜ் எஸ்டேட் மேலாளர் இக்பால், உபாசி வேளாண்மை அறிவியல் மைய மூத்த விஞ்ஞானி டாக்டர் சேதுமாதவன், வர்த்தகர் ஸ்ரீராம் முன்னிலை வகித்தார்.*

*நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தி னராக தேயிலை வாரிய தென் மண்டல செயல் இயக்குனர் அம்பலவாணன் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசும் போது கூறியதாவது:–*

*நல்ல விலை*

*நீலகிரி மாவட்டத்தில் 80 சதவீத தேயிலை தொழிற் சாலைகள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதற்கு முக்கிய காரணம் தொழிற் சாலையின் நிர்வாகத்தினர், விவசாயிகள் தான். இவர் களின் கூட்டு முயற்சியினால் இந்த தொழிற் சாலைகள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. தரமான தேயிலையை அவர்கள் உற்பத்தி செய்வதால் ரூ.15 முதல் ரூ.20 வரை விலை கிடைக்கிறது. தரமான தேயிலையை வழங்கினால் நல்ல விலை கிடைக்கும் என்பதற்கு இது ஒரு சான்று.*

*மேலும் ஒவ்வொரு கிராமத் திலும் விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்த சங் கங்கள் மூலம் பச்சை தேயி லையை தொழிற் சாலைக்கு வினியோகம் செய்து லாபம் ஈட்ட வேண்டும்.*

*அதிக விலை தரும் தொழிற்சாலைகள்*

*நீலகிரி மாவட்டத்தில் குந்தா பகுதியில் விழிப்புணர்வு இன்மை காரணமாக தரமான தேயிலையை வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் தொழிலாளர் கள் பற்றாக்குறை என்று கூறுகிறார்கள். தொழிலாளர் கள் பற்றாக்குறையை காரணம் காட்டி, உழைக்காமல் இருக்கக் கூடாது. விவசாயிகளும் உழைத்து தரமான பச்சை*

தேயிலையை வழங்க வேண்டும்.

இன்னும் 2 ஆண்டுகளில் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து, வேலை வாங்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படும். குந்தா பகுதியில் உள்ள விவசாயிகள் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலையை மட்டும் சார்ந்து உள்ளனர். இந்த நிலை மாறி, அதிக விலை கிடைக்கும் தேயிலை தொழிற்சாலைக்கு பச்சை தேயிலையை வினியோகிக்க வேண்டும்.

தேயிலை வாரியம் சார்பில் வரும் காலங்களில் கூட்டு பட்டாவாக உள்ள விவசாய நிலங்கள், பதிவு செய்யப்பட்டு கம்ப்யூட்டர் மயமாக்கப்படும் விரைவில் வந்தால், அடுத்த சந்ததியினருக்கு தனித்தனி பட்டாவாக கிடைக்க வாய்ப்புகள் உள்ளது.

மானியம்

படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு 50 சதவீத மானிய விலையில் தேயிலை பறிப்பு எந்திரம், கவாத்து எந்திரம் உள்பட விவசாய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு தேயிலை வாரிய தென்மண்டல செயல் இயக்கு னர் அம்பலவாணன் கூறி னார். நிகழ்ச்சியில் தேயிலை வாரிய திட்ட அலுவலர் சிவக் குமார் உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக விஞ்ஞானி டாக்டர் ராமமூர்த்தி வரவேற்று பேசினார். முடிவில் மகாமகா பெள்ளியப்பன் நன்றி கூறினார். மேலும் விவசாயிகளுக்கு தேயிலை தர மேம்பாட்டு அலுவலர் சிவக்குமார், செயல் முறை விளக்கம் அளித்தார்.